KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 31.05.2010

<table>
<tr><th>Date of the Council Meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>31.05.2010</td><td>737</td><td>பொருள் எண்: 1<br>காயல்பட்டிணம் மூன்றாம்நிலை நகராட்சியில் ஏப்ரல் 2010ம் மாதத்தில் கீழ்க்கண்டுள்ள பிறப்பு, இறப்புகளை பதிவு செய்து மன்றம் அங்கீகாரத்திற்கு.<br>
<table>
<tr><td colspan="4">ஏப்ரல் - 2010</td></tr>
<tr><td colspan="2">பிறப்பு</td><td colspan="2">இறப்பு</td></tr>
<tr><td>ஆண்</td><td>22</td><td>ஆண்</td><td>11</td></tr>
<tr><td>பெண்</td><td>20</td><td>பெண்</td><td>8</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>42</td><td>மொத்தம்</td><td>19</td></tr>
</table>
செயல் அலுவலர் குறிப்பு:-<br>பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ததை பார்வையிட்டு மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

738 **பொருள் எண்: 2**

காயல்பட்டணம் நகராட்சியில் 2010-2011-ம் ஆண்டிற்கான சொத்துவரி தொழில்வரி குடிநீர்கட்டணம் நிலுவை கேட்பு வசூல்மன்றத்தின் பார்வைக்கு

| | | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | கேட்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| 1 | சொத்துவரி | 0.25 | 15.50 | 15.75 | - | 0.64 | 0.64 | 0.25 | 14.86 | 15.11 |
| 2 | குடிநீர் கட்டணம் | 34.57 | 45.00 | 79.57 | 1.67 | 14.13 | 15.80 | 32.90 | 30.87 | 63.77 |

**செயல் அலுவலர் குறிப்பு:-**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம

அங்கீகரிக்கப்பட்டது

739 **பொருள் எண்: 3**

திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010-2011 ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின்படி தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: அ2/836/2010 நாள் 27.04.2010-ன்படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஓடக்கரையில் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம் கட்டுதல் | 2.75 |
| 2 | கீழலெட்சுமிபுரம் மகளிர் சுயஉதவிக்குழு கட்டிடம் கட்டுதல் | 2.75 |
| 3 | கற்புடையார்பள்ளிவட்டத்தில் (சிங்கித்துறை) மீன் வலை கூடம் கட்டுதல் | 1.00 |
| 4 | கடையக்குடியில் (கொம்புத்துறை) மீன்வலை கூடம் கட்டுதல் | 1.00 |

**செயல் அலுவலர் குறிப்பு:-**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

அங்கீகரிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 740 | **பொருள் எண்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சி உட்பட்ட 13 தெருக்களுக்கு பாத்தியப்பட்ட இடுகாடு பப்பரபள்ளி சுடுகாடு உள்ளது. இந்தமையானத்தில் ஏற்கனவே இருந்த கிணறு பாழடைந்து விட்டது தற்போது இறுதி சடங்கு தேவைக்கு தண்ணீர் எடுக்க சிரமமாக உள்ளது என்றும் அக்கிணற்றை சீரமைத்து பயன்படுத்தக்கூடிய வகையில் மேம்பாடு செய்து தரவேண்டும் என்று நகர்மன்ற தலைவர் மற்றும் செயல் அலுவலர் அவர்களுக்கு வரப்பெற்ற கடிதத்தின் மூலம் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைப்படி கிணற்றை சீரமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 741 | **பொருள் எண்: 5**<br>காயல்பட்டிணம் மூன்றாம்நிலை நகராட்சி பகுதியில் சாலைகள் மேம்பாடு செய்வதற்கு ரூ.249 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மானம் எண்: 712 நாள்: 05.04.2010ல் அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியினை கடனாக பெற்று செய்யும்பட்சத்தில் கடனை திரும்ப செலுத்துவதற்கு நகராட்சி நிதி நிலைமை மோசமாக உள்ளதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதி நிதி நிறுவனம், சென்னை அவர்கள் மூலம் மொத்த மதிப்பீட்டுத் தொகையையோ அல்லது பகுதி மதிப்பீட்டுத் தொகையையோ மானியமாக மட்டும் பெற்று பணிகள் மேற்கொள்ளவும். மானியத்தின் மூலம் பெறப்படும் நிதியினை மட்டுமே சாலை மேம்பாட்டு பணிகள் செய்யலாம் என்று கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் அவர்களது கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 742 | **பொருள் எண்: 6**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் 1-வது வார்டு பகுதியான அருணாச்சலபுரத்தில் மயான இடத்தில் புதியதாக கிணறு அமைக்க வேண்டும் என்று நகர்மன்ற உறுப்பினர் திருதா.திருத்துவராஜ் அவர்களின் கடிதத்தின்படியும் மன்றதீர்மானத்தின்படியும் நகராட்சிப் பொறியாளர் மற்றும் நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.25 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.25 இலட்சத்தை மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | 743 | **பொருள் எண்: 7**<br>காயல்பட்டிணம் நகராட்சிப் பகுதியில் 18-வது வார்டு பகுதியான சேதுராஜா தெருவில் பொதுமக்களுக்கு மிகவும் பயன்பட்டு வரும் கிணறு மிகவும் பழுதடைந்துள்ளது எனவும் அதனை சீரமைத்து தரவேண்டும் எனவும். அதனை சுற்றி பாதுகாப்பு சுவர் அமைத்து தரவேண்டும் எனவும் நகர்மன்ற உறுப்பினர் திரு காசிராஜன் அவர்களின் கடிதத்தின்படியும் மன்றதீர்மானத்தின்படியும் நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.25 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.25 இலட்சத்தை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 744 | **பொருள் எண்: 8**<br>காயல்பட்டிணம் நகராட்சிப் பகுதி 15-வது வார்டுக்குட்பட்ட பகுதி முத்துஹாஜி நகர் 2-வது தெரு (ஹாஜி அக்பர்ஷா நகர் 2-வது தெரு) சாலை மண் சாலையாக உள்ளது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும் இத்தெருவில் பள்ளிக்கூடம் இருப்பதால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே அத்தெரு சாலையை தார்ச்சாலையாக அமைக்க நகராட்சிப் பொறியாளர் (பொ) மற்றும் நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் ரூ.6.10 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.10 இலட்சத்திற்கு (325 மீட்டர் நீளம், 3.65 மீட்டர் அகலம்) நகர்மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களிடம் முன் அனுமதி பெற்றதையும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்க.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகர்மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதையும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகரிக்கலாம | |
| | 745 | **பொருள் எண்: 9**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் 5-வது வார்டுக்குட்பட்ட பகுதி கி.மு.கச்சேரி தெரு சாலை சிமெண்ட் தளமாக உள்ளது. மேலும் இந்த சாலை வடகிழக்கு பருவ மழையின் (2009) காரணமாக மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் நடமாட முடியாத அளவிற்கு குண்டும் குழியுமாக உள்ளது. மேலும் இச்சாலை நயினார் தெரு மற்றும் மிகமுக்கியத்துவம் வாய்ந்த ஜாவியா மஹ்லறா பள்ளிக்கு செல்லும் மிகமுக்கியமான சாலையாகும். வடகிழக்கு பருவ மழையின்போது (2009) அதிகம் பாதிக்கப்பட்ட சாலைகளில் இதுவும் ஒன்றாகும். இது மசூதிக்கு செல்லும் பிரதான சாலையாக இருப்பதால் இதனை சீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டும் இச்சாலையின் உயரத்தை அதிகரிக்காமல் பழுதான சாலையை தோண்டி எடுத்து விட்டு ஏற்கனவே இருந்த சாலையின் உயரத்திற்கு மிகாமல் சாலை அமைக்கப்பட வேண்டும் என்பதாலும் நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சியின் மேற்பார்வையாளர் அவர்களால் உத்தேச மதிப்பீடு ரு.6.30 இலட்சத்திற்கு (190 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலம்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியின் மதிப்பீடு தொகை ரு.6.30 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களிடம் முன்அனுமதி பெற்றதையும் ஒப்பந்தப்புள்ளி கேரியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதையும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 746 | **பொருள் எண்: 10**<br>காயல்பட்டிணம் நகராட்சி பகுதி 1-வது வார்டுக்குட்பட்ட பகுதி கடையக்குடி மற்றும் அருணாச்சலபுரம் தெற்கு தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகக்குழாய் பதித்து தரவேண்டும் என்று நகர்மன்ற உறுப்பினர் திரு தா.திருத்துவராஜ் அவர்களின் கடிதத்தின்படி 28.10.2009 அன்று நடந்த நகர்மன்ற கூட்டத்தில் தீர்மானம் (தீர்மான எண்: 646 நாள்: 28.10.2009) நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு நகராட்சிப் பொறியாளர் (பொ) மற்றும் நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் அவர்களால் உத்தேச மதிப்பீடு ரூ.0.40 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதியும் குடிநீர் பணி என்பதாலும் நகர்மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி மேற்க்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை 0.40 இலட்சத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்றதையும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்க.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>நகர்மன்றத் தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கியதையும் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 747 | **பொருள் எண்: 11**<br>காயல்பட்டிணம் நகராட்சிக்குட்பட்ட கற்புடையார்பள்ளிவட்டம் (சிங்கித்துறை) மற்றும் கடையக்குடி (கொம்புத்துறை) பகுதிகளில் ஏற்கனவே அடிமனை நீங்கலாக மேற்கூரை வரி விதிப்பு செய்யப்பட்ட வரி விதிப்புதாரர்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது தொடர்பாக மன்றத்தின் பரிசீலனைக்கு.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 748 | **பொருள் எண்: 12**<br>காயல்பட்டிணம் நகராட்சியின் ஏப்ரல் 2010 மாதம் செலவுப் பட்டியல் செலவுச் சீட்டு எண்.01 முதல் 17 முடிய நகர்மன்ற ஒப்புதலுக்கும் அனுமதிக்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 749 | **பொருள் எண்: 13**<br>காயல்பட்டிணம் நகராட்சி 1-வது வார்டு அருணாசலபுரம் கீழத்தெருவில் குடிநீர் குழாய் மிகவும் மோசமடைந்து தண்ணீர் முறையாக பொதுமக்களுக்கு கிடைப்பதில்லை. ஆகையால் சுமார் 600 மீட்டர் தூரத்திற்கு குடிநீர் குழாய் 3'' மாற்றி தரும்படி கேட்டுக் கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு தா.திருத்துவராஜ் என்பவரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 750 | **பொருள் எண்: 14**<br>காயல்பட்டணம் மூன்றாம் நிலை நகராட்சி பகுதியியில கணிணியில் சொத்துவரி கேட்புகளை பதிவு செய்யும்போது சில சொத்துவரி கேட்புகள் நீக்கப்படாமலும் சில சொத்துவரி கேட்புகள் இரண்டு முறையும் பதிவு செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே ஒரு பட்டியல் தயார் செய்து விடுபட்ட மற்றும் இரண்டு முறை சேர்க்கப்பட்டுள்ள கேட்பு வரி பதிவுகளை சேர்த்துக் கொள்ளவும் நீக்கம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு<br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 751 | **பொருள் எண்: 15**<br>காயல்பட்டிணம் நகராட்சியில் பொதுநிதிப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பன்னிரெண்டாவது நிதிக்குழு திட்டம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களில் மதிப்பீடுகள் தயாரிக்கவும், நடைபெறுகின்ற வளர்ச்சிப் பணிகளை பார்வையிடவும் நகராட்சிப் பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப பணியாளர் எவரும் இல்லாததால் ஏற்கனவே தொழில்நுட்ப பணியாளராக பணிபுரியும் திரு K.செந்தில்குமார் என்பவரை 01.06.2010 முதல் 31.08.2010 வரை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி பணி மேற்பார்வையாளர் மற்றும் | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.20000/- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><br>**செயல் அலுவலர் குறிப்பு:-**<br><br>திரு K.செந்தில்குமார் என்பவரை 01.06.2010 முதல் 31.08.2010 வரை பணியமர்த்திக் கொள்ள நகராட்சிப் பொறியாளரால் தயாரிக்கப்பட்ட ரூ.20000/-க்கான மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம். | |